திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவர் அவர்களே, அமைதியாக இருக்கிற தமிழக மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்ற முறையில் ஏற்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தை கைவிடுமாறு மத்திய அரசை நமது அரசு கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசுக்கு அப்படிப்பட்ட நல்ல எண்ணம் வரும் என்று என்னாலே நம்பமுடியவில்லை. ஒரு மொழியைப் பரப்புவது வேறு, ஒரு மொழியை ஒரு நாட்டிலே திணிப்பது வேறு. ஒரு மொழியை ஆட்சிமொழியாக, இந்திய தேசிய மொழியாக ஏற்றுக் கொள்வது காலப்போக்கிலே, மக்களுடைய கலாச்சாரத் தொடர்பால் ஏற்பட வேண்டும். ஆனால், மத்திய ஆட்சி அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. எப்படியாவது ஹிந்தியை ஆட்சிமொழியாக இந்த நாட்டிலே வைத்துவிடலாம், அதற்கு எந்த முறையையாவது பின்பற்றலாம் என்று எண்ணுவதுபோல்தான் எனக்குத் தோன்றுகிறது.

பள்ளிகளில் வேலை நேரம்

***296 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி வேலை நேரத்தை வரும் கல்வியாண்டிலிருந்து அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

கிண்டியில் பிளாஸ்டிக் பயிற்சி நிலையம்

***297 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் மத்திய அரசு பிளாஸ்டிக் தொழிற்குரிய பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்துள்ளதா ?

(இ) ஆம், எனில் எத்தகைய பயிற்சிகள் இருக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு ப்ளாஸ்டிக் பயிற்சி நிலையம், ப்ளாஸ்டிக் பதனப் படுத்தல், தொழிற்சாலையில் வார்ப்படம், அச்சுகள் மற்ற கருவிகள் இவற்றின் அமைப்பு முறையைப்பற்றியும், உற்பத்தி செய்தலைப்பற்றியும் ஆலோசனையும், பயிற்சியும் அளிக்கும். இந்த நிலையம் ப்ளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்வதில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன் படுத்துவதற்கு வணிக நிறுவனங்களுக்கு உதவி செய்யும்.

2 நடைமுறைக் கேள்விகள்.

(அ) ஒரு வினாவிற்கு விடையளித்த பின்னர் துணை வினாவே அனு மதிக்கப்படாத முந்தைய வினாவிற்குத் துணை வினாக் கேட்க அனுமதி.

THIRU T. MARTIN : With your permission, Sir, I will put a supplementary to the earlier question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடியாது, அந்தக் கேள்வியைத் தாண்டிவிட்ட பிறகு கேட்க முடியாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி 296-க்கு ஒரு சப்ளிமெண்டரிகூட போடவில்லை. விதிகளிலே என்ன சொல்கிறது என்றால், அதாவது ரூல் 38 (2)-ல்